
# திராவிடத்தால் வாழ்கிறோம்

906

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

73

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# ஜனநாயக இயக்கம்!

‘சுதந்திர நாளை, துக்கநாள்’ என அறிவித்தவர் தந்தை பெரியார். ஆனால், ‘நம்மை அடிமைப்படுத்தியதில் ஒருவன் வெளியேறுகிறான்’ என்று சுதந்திர நாளை ஆதரித்தவர் பேரறிஞர் அண்ணா. அப்போது திராவிடர் கழகத்தின் தலைவர் பெரியார், பொதுச் செயலாளர் அண்ணா. இதனால், அவரவர் கருத்தை மாறுபட்டு வெளிப்படுத்திய போதும், அவரவர் பதவிகளில் தொடர்ந்தனர் என்பது ‘ஜனநாயகம்’. இந்த ஜனநாயகத்தன்மை, ‘சுயமரியாதை இயக்கம்’ உருவான காலம் தொட்டே இருந்திருக்கிறது என்பதற்கான சான்று 1928-ஆம் ஆண்டு நடைபெற்ற தஞ்சை ஜில்லா ‘பார்ப்பனரல்லாத இளைஞர் மாநாடு’.

26.03.1928 அன்று காலை 8.30 மணிக்கு, ரயில் நிலையத்தில் இருந்து பெரியார், சக்கரை செட்டியார், ஆரியா ஆகியோர் இரட்டைக்குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டில் அழைத்துச் செல்லப்பட்டனர். சர் ஏ.டி.பன்னீர்செல்வம், உமா மகேஸ்வர பிள்ளை ஆகியோர் மோட்டார் வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். ‘தியாகராயருக்கு ஜே! டி.எம்.நாயருக்கு ஜே! நாயக்கருக்கு ஜே!’ என்ற முழக்கங்களை எழுப்பிக்கொண்டே ஆயிரக்கணக்கானோர் பேரணியில் சென்றனர். நாதஸ்வர மேள வாத்தியங்களுடன் பேரணி களைகட்டியது.




ஓவியம் : சிகரன்

பேரணி சென்ற தெருக்களில் பெரிய அலங்கார வளைவுகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மாநாட்டுக் கொட்டகை முழுவதும் நீதி வாக்கியங்கள், சுயமரியாதைப் பிரச்சாரக் கருத்துகள் தாங்கிய பதாகைகள் அமைக்கப்பட்டிருந்தன. பன்னீர்செல்வம் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்து, சிறிது நேரம் உரையாற்றினார். அனைத்துத் தலைவர்களின் பெயர்களையும் குறிப்பெடுத்துப் பதிவுசெய்ய இயலாத அளவுக்கு மேடையில் கட்டுக்கடங்காத கூட்டம் இருந்தது.

நாகை ராஜா, கரந்தை மகாலிங்க முதலியார், திருச்சி ராவணதாசன் ஆகியோர் தியாகராயர், டி.எம்.நாயர், பெரியார் குறித்து பாடல்கள் பாடி கூட்டத்தை உற்சாகப்படுத்தினர். அதன்பிறகு, வள்ளியம்மை மாநாட்டைத் திறந்துவைத்து உரையாற்றினார். சேவியர் என்பவர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதன்பிறகு வாழ்த்துக் கடிதங்கள் வாசிக்கப்பட்டன. ஆனால், கடிதங்கள் மிக அதிகமாக வந்திருந்ததால், கடிதம் அனுப்பியோரின் பெயரை மட்டுமே சொல்ல முடிந்தது. மாநாட்டுத் தலைவர் சர்க்கரை செட்டியார் தலைமை உரையாற்றி பிறகு, மதிய உணவுக்காக மாநாடு கலைந்தது.

பின்னர் மீண்டும் மாநாடு கூடியதும், கீழே இருந்த தொண்டர் ஒருவர் மேடையை நோக்கி குரல் எழுப்பினார். “நாங்கள் எல்லோரும் பார்ப்பனரல்லாதார் கடைகளில் காலை ஆகாரம் வாங்கி சாப்பிட்டிருக்க, தலைவர்கள் என்பவர்களுக்கு மாத்திரம் பார்ப்பனர்களிடம் இருந்து வாங்கி வந்து வழங்கலாமா?” என்று ஆவேசத்துடன் பேசினார். சாதாரண தொண்டர் ஒருவர் மேடையில் இருக்கும் தலைவர்களைப் பார்த்து இப்படிக் கேட்கலாமா என யாரும் ஆவேசமடையவில்லை. மாறாக, வரவேற்புக் குழுவைச் சேர்ந்த உமா மகேஸ்வரம் பிள்ளை, மிகப் பொறுமையாகவும் இனிமையாகவும் எடுத்துச்சொல்லி, இனி இதுபோல நடக்காமல் பார்த்துக்கொள்வதாக சமாதானப்படுத்தினார். இந்த விவாதத்தை ‘இதுசமயம் சபையோருக்கு ஏற்பட்ட ஆனந்தம் அளவிடற்பாலதல்ல’ என நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டிருக்கிறது ‘குடிஅரசு’ ஏடு.

மாநாட்டில் இருபது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, தஞ்சை ஜில்லாவில் அரசு வேலைவாய்ப்பு நிலைகளைப் புள்ளிவிவரங்களுடன் எடுத்து, அதில் பார்ப்பனர்களின் பிரதிநிதித்துவம் ஏகபோகமாய் இருப்பதையும், பார்ப்பனரல்லாதோருக்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, உரிய பிரதிநிதித்துவம் கோரியது இம்மாநாடு. பார்ப்பனிய மேலாதிக்கக் கோட்டையை வெடிவைத்து, தகர்க்க அடித்தளமிட்டன இத்தீர்மானங்கள்.

**...கூட்டம் திரளும்**

## தலையாட்டி பொம்மை எடப்பாடி பழனிசாமி!

“மோடியும், அமித்ஷாவும் ஆட்டுவித்தால் ஆடக்கூடிய தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையான எடப்பாடி பழனிசாமி, கம்யூனிஸ்டுகள் போராடவில்லை என குற்றம் சாட்டுவது வேடிக்கையாக உள்ளது” என சி.பி.எம். மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் காட்டமாக பதில் அளித்துள்ளார்.

“மக்களைப் பாதிக்கும் விஷயத்தை மத்திய, மாநில அரசுகள் செய்தால், அதனை உடனடியாக எதிர்த்து வலிமை மிக்க போராட்டங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தி வருகின்றது. எனவே, போராடுவதற்கு கம்யூனிஸ்ட்களுக்குச் சொல்லித் தரக்கூடிய இடத்தில் அவர் இல்லை. அவர் சொல்லி, கேட்கக்கூடிய இடத்திலும் நாங்கள் இல்லை. வேளாண் விரோத சட்டங்களை பா.ஜ.க. அரசு கொண்டு வந்தபோது, மக்களவையில் அ.தி.மு.க. ஆதரித்து வாக்களிக்காமல் இருந்திருந்தால், அந்தத் திட்டம் வருவதற்கு அவசியமே இருந்திருக்காது. லட்சக்கணக்கான விவசாயிகள் ஆண்டுக் கணக்கில் போராட வேண்டிய அவசியமோ, 800 விவசாயிகள் உயிரைப் பறிகொடுக்க வேண்டிய அவசியமோ இருந்திருக்காது.

எனவே, பா.ஜ.க.வின் வேளாண் சட்டத்தை ஆதரித்த குற்றத்துக்காக, அவர் இந்திய நாட்டு விவசாயிகளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இந்த நான்கு வருட காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில், அ.தி.மு.க. தமிழ்நாட்டில் எத்தனை போராட்டத்தை நடத்தி இருக்கிறது. நாங்களாவது தோழமைக் கட்சி எந்த அளவுக்கு நடத்த வேண்டுமோ, அந்த அளவுக்குப் போராட்டங்களை நடத்தி இருக்கிறோம்” என்றும் விமர்சனம் செய்துள்ளார்.

அதுபோல், “மக்களைத் தேடிச் சென்று, உங்களுக்கு என்ன குறை இருக்கிறது என்று கேட்பது, அவ்வளவு பெரிய குற்றமா. இதை ஏன் குற்றமாக பழனிசாமி பார்க்கிறார். மக்களைத் தேடிச்சென்று குறைகளைக் கேட்பதும், அதை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதும் வரவேற்க வேண்டிய நல்ல விஷயம்தான்” என்கிற அவரது பதிலும் சமூக வலைதளங்களில் பரவலாக பகிரப்பட்டு வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### கிளைக் கழகத்தில் தலைவருக்கு மரியாதை!



க.அன்பழகன்

1969-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்பு முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக திருச்சி மாவட்டம், திருவரங்கத்திற்கு வருகை தந்தார். அப்போது திருவரங்கம் பேருந்து நிலையம் அருகில், அன்றைய கிளைக் கழகச் செயலாளரான என் தந்தை தமிழழகன் கந்தசாமி அவர்கள் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத்திற்கு, அய்யா கழக முன்னோடி அன்பிலார் அவர்கள் தலைமை வகித்த நிலையில், தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்து சிறப்புரையாற்றினார். அப்போது என் தந்தை தலைவர் கலைஞருக்கு மலர் மாலை அணிவித்து, சிறப்பு செய்தபோது எடுக்கப்பட்ட படம்.

– க.அன்பழகன்,
அமைப்பாளர், மாநகர இளைஞர் அணி, திருச்சி மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


73

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# சமத்துவத்தை நோக்கிய பயணம்!

சமத்துவத்தை நோக்கிய நெடும் பயணத்தில் 20-ஆம் நூற்றாண்டில் இருந்ததைவிட, இன்றைய 2025-இல் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களை நாம் அடைந்துள்ளோம். கடந்த நூற்றாண்டை விட, இந்த நூற்றாண்டில் சமத்துவத்துக்கான பாதையும், குரலும் வலுவாகவே உள்ளன.

21-ஆம் நூற்றாண்டில் சமத்துவம் குறித்தும், அது ஏன் முக்கியம் எதனால் முக்கியம் என்பது பற்றியும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற இரண்டு அறிவுஜீவிகள் மேற்கொண்ட உரையாடல் *Equality What it means and why it matters* என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது. ‘பாலிட்டி’ பதிப்பகம் ஆங்கிலத்தில் இந்நூலை வெளியிட்டிருக்கிறது.




தாமஸ் பிக்கெட்டி உலக அளவில் நிலவும் சமத்துவமின்மை பற்றியும், சமத்துவத்தின் வரலாறு குறித்தும், தரவுகள் நிரம்பிய ஆய்வுகளை மேற்கொண்டு பல்வேறு நூல்களை எழுதி வருபவர். மைக்கேல் சாண்டில் இடஒதுக்கீடு - சம நீதி - சமூகநீதி - மெரிட் போன்றவை குறித்து தனித் தனியாக பெரும் வரவேற்பைப் பெற்ற புத்தகங்களை எழுதி இருக்கிறார்.

இருவரும் இணைந்து 2024-ஆம் ஆண்டு பாரீஸ் பொருளாதார பள்ளியில் சமத்துவம் குறித்து நிகழ்த்திய உரையாடல், அரசியல் மீது நாட்டம் கொண்டவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. அவர்கள் பேசிய கருத்துகளின் முக்கியத்துவம் கருதி அந்த உரையாடல் சிறு நூலாக, முற்போக்கு சக்திகளுக்குப் பயன்படும் ஆவணமாக உருவாகி இருக்கிறது.

மேற்குலக நாடுகளில் நிலவும் சமத்துவமின்மை குறித்தும், உலகமெங்கும் கடைப்பிடிக்கப்படும் நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கை அதை மேலும் எப்படி எல்லாம் ஊக்குவிக்கிறது என்பது பற்றியும் இருவருக்கும் இருக்கும் கவலைகளைப் பகிர்ந்துகொண்டு உரையாட தொடங்குகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து சந்தைப் பொருளாதாரத்தின் எல்லைகள், உலகமயமாக்கலால் விளைந்த வினைகள், வலதுசாரி சக்திகளின் எழுச்சி, முற்போக்கு வரி விதிப்பு முறையின் அவசியம், உயர்கல்வி நிலையங்களில் நிலவும் அசமத்துவம், இடப்பெயர்வு ஏற்படுத்தும் இனவாதப்போக்கு, காலநிலை மாற்றம் மூலம் ஏற்படும் பொருளியல் தாக்கம், இடதுசாரிகளின் எதிர்காலம் என்ற பொருட்களில் எல்லாம் நடைபெற்ற செறிவு நிறைந்த உரையாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில், பட்டியல் சமூகத்தினர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இடஒதுக்கீடும் அது அச்சமூக மக்களுக்கு வழங்கும் அரசியல் உரிமைகளும் இந்நூலில் பேசுபொருளாகி உள்ளன. மற்ற நாடுகளில் இருக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரமளிக்க, இந்த முறையைப் பின்பற்றலாம் என்றும் அவர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

சமத்துவத்தை நோக்கிய பயணம் என்பது எளிமையானதல்ல, அதை நடைமுறைப்படுத்த- பின்பற்ற ஆழமான லட்சியப் பிடிப்பும் அர்ப்பணிப்பு உணர்வும் வேண்டும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. அப்படி ஆழ்ந்த கொள்கையுணர்வு கொண்ட தலைவர்களின் விளைவாகத்தான் இன்றைக்கு நாம் இருக்கும் நிலையை எட்டி இருக்கிறோம், பிரச்சினையைச் சுட்டிக்காட்டுவதுடன் நிறுத்திக்கொள்ளாமல் இலக்குகளை அடைய எதிர்காலத்தில் தேவைப்படும் செயல்திட்டங்களையும் இந்நூல் வழங்குகிறது. அதுதான், இந்நூலை அவசியம் வாசிக்க வேண்டியதற்கான காரணமுமாக உள்ளது.

**...வாசிப்போம்.**

## மலரும் நினைவுகள்

### சட்டமன்ற வெள்ளிவிழா தங்கப் பதக்கம்!

1982-ஆம் ஆண்டு, குளித்தலையில் நடைபெற்ற கலைஞரின் சட்டமன்றப் பணி வெள்ளிவிழா கொண்டாட்டத்தின்போது, மாவட்டக் கழகத்தின் சார்பில் அண்ணா, கலைஞர் உருவம் பொறித்த முப்பது பதக்கங்கள் கொண்ட தங்க சங்கிலி கலைஞருக்கு அணிவிக்கப்பட்டது. ‘அந்தப் பதக்கங்களை கட்சிக்குச் சொந்தமாக்குகிறேன்’ என அறிவித்தார் கலைஞர். அங்கேயே ஏலம் விடப்பட்ட அந்தப் பதக்கங்கள் கழகத்தினர் வீடுகளுக்குச் சென்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131